தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி-23.
ந.க.எண்.1/உ1/2024 நாள் 28.07.2026

பொருள்: தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) திருச்சி-23 – **நவம்பர் 2026** தேர்வுக் கட்டணம் செலுத்துதல் – விவரங்கள் தெரிவித்தல் - தொடர்பாக.

------------

**நவம்பர் 2026**-ல் நடைபெறவுள்ள பருவத்தேர்வுகளில் இளநிலை மூன்றாம் பருவம் (III Semester), ஐந்தாம் பருவம் (V Semester) மற்றும் முதுநிலை மூன்றாம் பருவ(III Semester) தேர்வுக்களுக்கான தேர்வு கட்டணம் இணையவழியாக செலுத்தும் நாள் **05.08.2026** முதல் தொடங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களது தேர்வுக்குரிய கட்டணத்தை QR Code (or) URL Link மூலமாக தாங்கள் இருக்கும் இடத்திலேயே இணைப்பு – 1 ல் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி **05.08.2026** முதல் உரிய காலத்தில் கட்டணத்தைச் செலுத்தி தேர்வுக்கு தவறாமல் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். முதல் பருவ இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கு பருவத் தேர்வுக்கான பதிவு பட்டியல் (Exam Registration Galley)க்கான சுற்றறிக்கை மாணவர்கள் பதிவு எண் நிச்சயப்படுத்தப்பட்டப் பின்பு அந்தந்த துறைகளுக்கு வழங்கப்படும். **தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் நேரடியாக தேர்வுக் கட்டணம் செலுத்தம் முறைக்குப் பதில் இணையவழியாக(Online) மட்டுமே கட்டணம் செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.**

பதிவு பட்டியல் (Exam Registration Galley) மாணவர்கள் சார்ந்த துறைகளுக்கு பின்னர் வழங்கப்படும். தேர்வுக் கட்டணம் செலுத்திய பின்னர் ஒவ்வொரு மாணவரும் கட்டாயம் G-Pay Trasanction எண்களை பதிவு பட்டியலில் (Exam Registration Galley) எழுதி G-Pay ரசீதினை துறையில் ஒப்படைத்து கையொப்பமிடவேண்டும். தேர்வு கட்டணத் தொகைக்கான உரிய G-Pay Trasanction எண் மற்றும் தொகையினை எழுதிட வேண்டும். மாணவர்கள் ஏதாவது நிலுவையிலுள்ள (Arrear) பாடத் தலைப்புக்கு (Title of the Paper)தேர்வு எழுத விருப்பமில்லையெனில், அதற்குறிய பாடக்குறியீட்டையும்(Subject Code) மற்றும் செலுத்த வேண்டிய கட்டணங்கள் என்ற தலைப்பில் அச்சிடப்பட்டுள்ள எண் மற்றும் தொகையினையும் சிவப்பு நிறத்தில் வட்டமிட வேண்டும். மேற்கண்ட திருத்தங்களை மாணவ மாணவியர்கள் வேண்டுகோளின் அடிப்படையில் **பொறுப்பாசிரியரே தன் கைப்பட** மேற்கொள்ள வேண்டும். இத்தகைய திருத்தங்கள் உரிய கட்டணம் செலுத்திய இரசீதை பெற்றுக்கொண்ட பின்பே மேற்கொள்ளப்பட வேண்டும். தேர்வு கட்டணம் கட்டிய இரசீது இணையதளம் வழியாக பெற முடியாத மாணவர்கள் தங்களது G-Pay Trasanction ஒளிநகலினை(Xerox) எடுத்து அதில் தங்களது பதிவு எண், பெயர் மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றினை எழுதி துறைகளில் ஒப்படைத்து பதிவு பட்டியலில் (Exam Registration Galley) கையொப்பமிடலாம். **நடப்பு**

பருவ பாடங்கள் அனைத்திற்கும் **(Current Semester Subject)** கட்டாயம் தேர்வுக் கட்டணம் செலுத்திட வேண்டும்.

<u>தேர்வுக் கட்டண விவரம்</u> :

<table>
<tr><th>வ. எண்</th><th>விவரம்</th><th colspan="2">2025-2026 கல்வியாண்டிற்கு முன்னர் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ.</th><th colspan="2">2025-2026 கல்வியாண்டில் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>பதிவுக் கட்டணம்</td><td colspan="2">50</td><td colspan="2">70</td></tr>
<tr><td>2.</td><td>இளநிலை பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு</td><td colspan="2">75</td><td colspan="2">100</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td rowspan="2">இளநிலை பட்ட வகுப்பு செய்முறைத் தேர்வு ஒன்றுக்கு</td><td>3 hours</td><td>6 Hours</td><td>3 hours</td><td>6 Hours</td></tr>
<tr><td>100</td><td>200</td><td>140</td><td>280</td></tr>
<tr><td>4.</td><td>இளநிலை பட்ட வகுப்பு திட்ட அறிக்கை</td><td colspan="2">200</td><td colspan="2">250</td></tr>
<tr><td>5.</td><td>முதுநிலை பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு</td><td colspan="2">150</td><td colspan="2">175</td></tr>
<tr><td>6</td><td>முதுநிலை பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு – MCA</td><td colspan="2">300</td><td colspan="2">500</td></tr>
<tr><td rowspan="7">7</td><td rowspan="7">முதுநிலை பட்ட வகுப்பு செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு</td><td>Hours</td><td>Amount</td><td>3 Hours</td><td>4-6 Hours</td></tr>
<tr><td>3</td><td>200</td><td rowspan="6">300</td><td rowspan="6">400</td></tr>
<tr><td>4</td><td>250</td></tr>
<tr><td>5</td><td>300</td></tr>
<tr><td>6</td><td>350</td></tr>
<tr><td>8</td><td>500</td></tr>
<tr><td>10</td><td>600</td></tr>
<tr><td>8</td><td>முதுநிலை கணினி அறிவியல் செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு (MCA தவிர)</td><td colspan="2">300</td><td colspan="2">300</td></tr>
<tr><td rowspan="2">9</td><td rowspan="2">முதுநிலை MCA செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு</td><td>3 hours</td><td>6 Hours</td><td>3 hours</td><td>6 Hours</td></tr>
<tr><td>350</td><td>700</td><td>500</td><td>700</td></tr>
<tr><td>10</td><td>முதுநிலை பட்டவகுப்பு திட்ட அறிக்கை ( Project work) (MCA தவிர)</td><td colspan="2">400</td><td colspan="2">400</td></tr>
<tr><td>11</td><td>MCA முதுநிலை பட்டவகுப்பு திட்ட அறிக்கை ( Pıoject work)</td><td colspan="2">500</td><td colspan="2">500</td></tr>
<tr><td>12</td><td>மதிப்பெண் பட்டியலுக்கானக் கட்டணம் (அனைவருக்கும் பொதுவானது)</td><td colspan="2">100</td><td colspan="2">125</td></tr>
<tr><td>15</td><td>நிலுவைத்தாள் மதிப்பெண் பட்டியல் அனுப்ப பதிவுஅஞ்சல் கட்டணம் (மறுதேர்வு (Arrears) மாணவர்களுக்கு மட்டும்)</td><td colspan="2">100</td><td colspan="2">100</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 16 | அகமறுமதிப்பீட்டு கட்டணம் - தாள் ஒன்றுக்கு **(Internal Improvement)** | 100 | 750 |
| 17. | அபராத கட்டணம் (தாமதமாக கட்டணம் செலுத்துபவர்களுக்கு மட்டும்) | | |
| | 1) அபராதக் கட்டணத் தேதிக்குள் செலுத்துபவர்களுக்கு | 300 | 300 |
| | 2) அபராதக் கட்டணத் தேதிக்குப் பின்னர் செலுத்துபவர்களுக்கு (தட்கல் முறை) | 600 | 800 |

**நடப்புப் பருவத் தேர்வுக்குரிய கட்டணம் செலுத்தாமல், நிலுவைத் தாள்களுக்கு மட்டும் கட்டணம் செலுத்தக் கூடாது. நடப்புப் பருவத் தாள்களுக்கான தேர்வுக் கட்டணத்தை செலுத்தத் தவறினால், தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் அந்தக் கட்டணத்தை ரூ.500/- அபராதத்தோடு அடுத்து வரும் பருவத்தில் செலுத்துவதோடு அந்தத் தாள்களுக்கான நிலுவைத்தாள் கட்டணத்தையும் (Arrear Exam fees) செலுத்த நேரிடும் என அறிவிக்கலாகிறது.**

| **UG & PG கலை மற்றும் அறிவியல்** | நாள் விபரம் |
|---|---|
| அபராதமின்றி தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய காலம்: **(இணையவழியாக மட்டும்)** | **05.08.26 முதல் 12.08.26 வரை** |
| அபராதம் **ரூ.300/-** உடன் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய காலம் : **(இணையவழியாக மட்டும்)** | **13.08.26 முதல் 17.08.26 வரை** |
| தட்கல் முறையில் கட்டணம் ரூ.**600/-** மற்றும் ரூ.**800/-** உடன் தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டிய காலம் **(இணையவழியாக மட்டும்)**: | **18.08.26 முதல் 20.08.26 வரை** |

**தேர்வுக்கட்டணம் செலுத்தியிருந்தாலும், இரசீதின் நகலினைப் பொறுப்பாசிரியரிடம் ஒப்படைத்து தேர்வு பதிவு பட்டியலில்** G-Pay Trasanction **எண் குறிப்பிட்டு பொறுப்பாசிரியர் கையொப்பம் இட்டிருந்தால் மட்டுமே மாணவர்கள் தேர்வுக்கு பதிவு செய்ததாக கருதப்பட்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.**

## தட்கல் முறையில் பதிவு செய்தல்

**தேர்வுக்கான பதிவினை அபராதம் செலுத்தி மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளான 17.08.2026 வரை தேர்விற்கான பதிவு செய்ய தவறிய மாணவர்கள் தட்கல் பதிவுமுறையில் கட்டணம் செலுத்தலாம். இம்முறையில் உரிய கட்டணங்களுடன் தட்கல் (Tatkal) கட்டணமாக ரூ.600/-யும் செலுத்தி 18.08.2026 முதல் 20.08.2026 வரை தேர்வுக்கான பதிவினை இணையவழியாக மட்டுமே மேற்கொள்ள மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**குறிப்பு : வகுப்புப் பொறுப்பாசிரியர்கள் (Tutor-in-charge) தத்தம் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டண விவரத்தை முழுமையாக தெரிவித்து உரிய காலத்திற்குள் கட்டணத்தை இணையவழியாக செலுத்தி பதிவு மேற்கொள்ள அறிவுறுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

துறைத்தலைவர்கள் அந்தந்த வகுப்புப் பொறுப்பாசிரியர் (Tutor-in-Charge) உதவியுடன் மேற்கண்ட தேர்வு பதிவுப் பட்டியலில் உள்ள பதிவுகளைச் சரிபார்த்து, பணம் செலுத்திய அனைத்து மாணவர்களுக்கும் **G-Pay Trasanction எண்** தேதியுடன் குறிப்பிட்டுள்ளததைச் சரிபார்த்து, பொறுப்பாசிரியர் மற்றும் துறைத்தலைவர் முத்திரையுடன் கூடிய கையொப்பமிட்டு தேர்வு பதிவு பட்டியல் (Exam Registration Galley) மற்றும் ரசீது நகல் ஆகியவற்றோடு **21.08.2026**-க்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## SINGLE WINDOW INSTANT REGISTRATION
## (ஒற்றைச்சாளர உடனடிப் பதிவு முறை)

**தட்கல் முறையிலும் தேர்வுக் கட்டணம் செலுத்தத் தவறும் மாணவர்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தேர்வுக்கு பதிவு செய்திட ஒற்றைச்சாளர உடனடிப் பதிவுமுறையில் (Single Window Instant Registration) தேர்வுக்கட்டணம் செலுத்தலாம். இந்த முறையில், தட்கல் பதிவுக்கான காலம் நிறைவு பெற்ற பின்னர் கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு தேர்வு நெறியாளர் அலுவலக முன் அனுமதி பெற்று ரூ.1200/- ஒற்றைச்சாளர உடனடிப் பதிவுக் கட்டணத்துடன் பிற கட்டணத்தையும் சேர்த்து இணையவழியாக 21.08.2026 முதல் 07.09.2026 வரை மட்டுமே செலுத்தி தேர்வுக்குப் பதிவு மேற்கொள்ளலாம். இம்முறையிலும் இணைய வழியாக தான் கட்டணம் செலுத்த வேண்டும்.**

**நிபந்தனைகள் :**

1. **நடப்பு பருவங்களில் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்கள் (Current Students) மட்டுமே இம்முறையில் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.**
2. **கல்லூரியை விட்டுச் சென்ற (Outgone) மாணவர்கள் இம்முறையில் பதிவு செய்ய, தேர்வு நெறியாளரிடம் முன் அனுமதி பெற்ற பின்னரே கட்டணத்தை நேரடியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் செலுத்த அனுமதிக்கப்படுவர்.**
3. **பிற கட்டணங்களுடன் ரூ.1200/- உடனடி பதிவுக் கட்டணமாக சேர்த்து செலுத்த வேண்டும்.**

**கட்டண விலக்கு**

**மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்களது மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழை இணைத்து பொறுப்பு ஆசிரியர் மற்றும் துறைத் தலைவர் வழியாக முறையாக விண்ணப்பித்தால் நடப்பு பருவ தாட்களுக்கு மட்டும் கட்டண விலக்களிக்கப்படும். மேலும் நிலுவைத்தாட்களுக்கான (Arrear) தேர்வுக்கட்டணத்தை இணையவழியாக செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**படிப்புக் காலம் முடித்து நிலுவைத் தாட்கள் (Arrear Papers) உள்ள மாணவ மாணவியர்கள் (UG – 2022-2023 மற்றும் PG-2023-2024 கல்வியாண்டு முதல் சேர்ந்த மாணவர்கள் மட்டும்) தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் நேரடியாக விண்ணப்பம் பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பத்தை உரிய தேர்வுக் கட்டணத்துடன் பல்கலைக்கழகத்தால் மாற்றம் செய்யப்பட்டுள்ள தொகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் தற்காலிகச் சான்றிதழுக்கான நிலுவைத்தொகையின் கட்டண விவரத்தையும் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டு தேர்வுக் கட்டணத்தை செலுத்தி உரிய ரசீதுடன் பொறுப்பாசிரியர் மற்றும் துறைத் தலைவர் கையொப்பம் பெற்று 21.08.2026-க்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தேர்வுக்கட்டணம் தொடர்பான சந்தேகங்கள் இருப்பின் தேர்வு நெறியாளர் அலுவலகத்தை அணுகலாம்.**

28/7/26 | க. அங்கம்மாள் 28/07/26
---|---
**தேர்வு நெறியாளர்.** | **முதல்வர்.**

இணைப்பு :

1.இணையவழி கட்டணம் செலுத்தும் முறை

பெறுநர்:

1. அறிவிப்பு பலகை (2)
2. அனைத்து துறைத் தலைவர்கள். (மாணவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு)
3. நிதியாளர் மற்றும் கண்காணிப்பாளர்.
4. கிளை மேலாளர், கனராவங்கி, திருச்சி K.K. நகர் கிளை
5. உபரி - 2.

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி-23.

# இணைப்பு – 1

## இணையவழி கட்டணம் செலுத்தும் முறை

**நவம்பர் 2026** பருவத்தேர்வுக்கு பணம் செலுத்தி இணையவழி பதிவு செய்யும் மாணவர்கள் கீழ்கண்ட நடைமுறையை பின்பற்றவும்.

Stage 1: தேர்வு நெறியாளர் அலுவல இணையதள Link-னை **www.evrcoe.com** Click செய்ய வேண்டும்.

Stage 2: Student Login ஐ தேர்ந்தெடுக்க வேண்டும்.

Stage 3: User Name மற்றும் password-ஐ உள்ளீடு செய்து login செய்ய வேண்டும்.

User Name : **Register Number (மாணவரின் பதிவெண்)**

Password : **DOB (dd-mm-yyyy)**

Stage 4: Payment Portal-ல் Semester Examination Fees- Click செய்ய வேண்டும்.

Stage 5: நடப்பு பருவ தாட்கள், Internal improvement (கட்டாயமானது) நிலுவைத்தாட்கள் அனைத்துமே தானாக தேர்வுசெய்யப்பட்டு ☑ குறியீடு இடப்பட்டிருக்கும். ஏதாவது நிலுவைத்தாளுக்கு தேர்வு எழுத விரும்பவில்லையெனில் அத்தாளுக்கு முன்புள்ள குறியீட்டை ☑ click செய்து deselect ☐ செய்யவேண்டும்.

Stage 6: QR Code Payment மூலமாக சென்று இணையதளத்தில் உள்ள முழு தேர்வுக்கட்டணத் தொகை மற்றும் விபரங்களைத் தவறின்றி பூர்த்தி செய்து Payment-ஐ முடிக்க வேண்டும். முடித்த பின்னர் வரும் Transaction Id யினை 2 முறை பதிவு செய்து Submit Click செய்ய வேண்டும். பதிவு செய்த பின்னர் Transaction Id உடன் ரசீது View ஆகும் இதனை download செய்து கொள்ள வேண்டும்.

Stage 7: ரசீது download செய்த பின்னர் துறையில் ரசீதினை ஒப்படைத்து தேர்வுப் பதிவுப் பட்டியலில் **UPI அல்லது Transaction ID (**12 இலக்க எண் ; 12 digit number) குறிப்பிட்டு கையொப்பம் இட வேண்டும்.

**மாணவர்கள் கட்டாயமாக தாங்கள் எழுத வேண்டிய தேர்வு தாட்கள் சரியானதா என உறுதி செய்த பின்னரே தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டும். தேர்வுக் கட்டணம் செலுத்திய பின்னர் அதில் முரண்பாடுகள் இருந்தால் செலுத்திய தொகை திரும்ப தரப்படமாட்டாது.**

குறிப்பு: **தேர்வு கட்டண ரசீதினை இணையவழியாக பெறமுடியாத மாணவர்கள் தங்களது G-Pay Trasanction ஒளிநகலினை(Xerox) எடுத்து அதில் தங்களது பதிவு எண், பெயர் மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றினை எழுதி துறைகளில் ஒப்படைத்து பதிவு பட்டியலில் (Exam Registration Galley) கையொப்பமிடலாம் எனவும் தெரிவிக்கலாகிறது.**

***********